17th August 1960]

will the Government think about the desirability of choosing the site and also constructing the polytechnic building keeping in view that in future there may be the possibility of converting that building into a full-fledged engineering college?

THE HON. SRI C. SUBRAMANIAM : We require polytechnics as polytechnics and the Government of India do not agree to the conversion of polytechnics into engineering colleges. If an engineering college is required, it can be started independently of this polytechnic.

North Arcot Polytechnic

* 240 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state the present stage of the construction of a building to house the North Arcot Polytechnic?

THE HON. SRI C. SUBRAMANIAM : Steps are being taken for acquisition of land for construction of the building.

SRI A. A. RASHEED : May I know the reason for the delay?

THE HON. SRI C. SUBRAMANIAM : First one site was chosen and it was found later on that the price had increased there to a considerable extent. Therefore, another site had to be chosen and that site had been chosen and now they are proceeding with the acquisition of the building.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : May I know where it is going to be located?

THE HON. SRI C. SUBRAMANIAM : Round about Vellore.

Students sent to France for higher studies

* 241 Q.—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI S. M. ANNAMALAI) : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1959–60-ல் இலக்கியத் துறையில் மேற்படிப்பு அல்லது ஆராய்ச்சியை மேற்கொள்வதற்காக பிரான்ஸ் சர்க்காரின் உதவியின் கீழ் நம் மாநிலத்திலிருந்து மாணவர்கள் பிரான்ஸ் நாட்டிற்கு அனுப்பப்பட்டார்களா ?

(ஆ) அப்படியானால், எத்தனை பேர்?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) No, Sir.

(ஆ) Does not arise.

Fuel coupes

* 242 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) காடுகளிலுள்ள விறகுக்-கூப்களை (Fuel Coupes) ஆக்ஷனில் விடாமல் முந்தைய ஐந்தாண்டுகளில் இக் கூப்புகள் என்னென்ன விலைகளுக்குப் போயிருக்கின்றனவோ அதே

[17th August 1960

விலைக்குக் கொடுக்கப்படவேண்டுமென்று எந்தெந்தப் பிராந்தியங்களிலுள்ள ஹரிஜன கூட்டுறவு சொஸைடிகள் சர்க்காருக்கு விண்ணப்பித்துக்கொண்டன?

(ஆ) எந்தெந்த ஹரிஜன சொஸைடிகளுக்கு எத்தனை ரூபாய் மதிப்புள்ள கூப்கள் வழங்கப்பட்டன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) A paper[a] is placed on the table of the House.

SRI P. G. MANICKAM: திருநெல்வேலி, மற்றும் வேறு ஒரு ஜில்லாவில் மாத்திரம் இந்தக் கூப்களைப் பெறுவதற்கு ஹரிஜன கூட்டுறவு சொஸைடிகளை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. அதே மாதிரி ஒவ்வொரு ஜில்லாவிலும் அந்தந்த பிராந்தியங்களில் இவ்விதமான சொஸைடிகளை ஏற்படுத்தினால், அந்த இடங்களில் இந்தக் கூப்களை அந்த சொஸைடிகளுக்கு கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசாங்கம் கவனிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அம்மாதிரி எந்தெந்த இடங்களில் அப்படிப்பட்ட சொஸைட்டிகளை ஏற்படுத்தி அம்மாதிரியான சொஸைட்டிகளுக்கு சலுகைகள் கேட்டால் அரசாங்கம் அதைப்பற்றி பரிசீலனை செய்யும்.

SRI P. G. MANICKAM: இந்தப் பிராந்தியத்திலுள்ள சமுதாய தேசீய அபிவிருத்தித் திட்டத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகள் மூலம் இதர சொசைட்டிகள் ஏற்படுத்துவதைப் பற்றி அரசங்கம் கவனம் செலுத்துமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்தக் கேள்வியை எந்த இடத்தில் போட வேண்டுமோ அந்த இடத்தில் போட வேண்டும்.

SRI K. SATTANATHA KARAYALAR: இந்த ப்யூயல் கூப்களை வெட்டுவதில் "ஸ்டாக்ட் ஆன் தி ரோட்" என்று சொல்வதுபோல் தனிப்பட ஏலத்திற்கு விடப்படுகிறதா அல்லது "எண்டயர்" அதாவது எல்லா பாரஸ்ட் ஏரியாவும் ஏலத்திற்கு விடப்படுகிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பாரஸ்ட் கூப்பாக பிரித்து ஏலத்திற்கு விடப்படுகிறது.

Cancer.

*243 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இரண்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் 1960–61-ம் வருஷம் வரைக்கும் புற்று நோய் நிவாரணத்துக்காக எவ்வளவு தொகை மானியமாக மத்திய கவர்மெண்டானது சென்னை ராஜ்யத்துக்கு வழங்கியுள்ளார்கள்?

---

[a] Printed as Appendix III on Pages 384–385 infra